Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 325

திங்கட்கிழமை
17 ஒக்ரோபர் 2022

புரட்டாதி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## வெட்டுக்காயங்களுடன் ஒருவர் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 17
வல்லிபுரக்குறிச்சிப் பகுதியில் வெட்டுக்காயங்களுடன் பருத்தித்துறையைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவர் நேற்று இரவு மீட்கப்பட்டுள்ளார்.
வல்லிபுரக்குறிச்சிப் பகுதியில் வெட்டுக்காயங்களுடன் 09

# உயிர்கொல்லி ஐஸ் வியாபாரிகள் கைது

மன்னாரிலிருந்து கடத்தப்படும் உயிர்கொல்லி போதைப்பொருள்

பணம் இல்லாதவர்கள் பொருள்களை அடகு வைத்து கொள்வனவு

சந்தேகநபர்களிடமிருந்து 7 அலைபேசி, மோட்டார் சைக்கிள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 17
உயிர்கொல்லிஐஸ்போதைப்பொருளை மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கடத்தி வந்து விற்பனை செய்து வந்த பிரதான வியாபாரி ஒருவர் உட்படமூன்று பேரை பொம்மைவெளிப் 10

## மின்சாதனங்கள் விற்பனை போர்வையில் நடமாடும் போதைமாத்திரை விநியோகம்

### இரண்டு இளைஞர்கள் அதிரடியாகக் கைது



யாழ்ப்பாணம், ஒக். 17
மின்சாதனங்கள் விற்பனை செய்பவர்கள் போல் பாசாங்கு காட்டி உயிர்கொல்லிப் போதை மாத்திரை விற்பனையில் ஈடுபட்டு வந்த இருவரை கோப்பாய் பொலிஸார் கல்வியன்காடு ஞான பாஸ்கரோதயா விளையாட்டரங்க வீதியில் வைத்து நேற்று மாலை 4.30 மணியளவில் கைது செய்துள்ளனர். 10

## வல்லைச் சந்தியில் தொடரும் வழிப்பறி

### நேற்றும் 9 பவுண் தாலிக்கொடி அறுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17
வல்லைச் சந்திக்கு அண்மையாக நேற்று மதியமும் வழிப்பறிச்சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. பலர் பார்த்திருக்க பட்டப்பகலில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த ஒரு வாரத்தினுள் 4 ஆவது 11

# தவறுகளைத் திருத்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்

### ஆட்சிப்பீடமேறுவதற்கு மஹிந்த சிங்களவர்களிடம் புதிய 'உருட்டு'



**கொழும்பு, ஒக்ரோபர் 17**

**தவறு இடம்பெற்றுள்ளது என்பதை ஏற்பதற்கு நாம் வெட்கப்பட வில்லை. முயற்சிக்காமல் முடங்கி கிடப்பதுதான் வெட்கப்படவேண்டிய விடயமாகும். எனவே, விட்ட தவறை திருத்திக்கொள்வதற்கு வாய்ப்பொன்று வழங்கப்படவேண்டும். பொதுவேலைத்திட்டத்தின்கீழ் அனைவரும் ஒன்றிணைந்து பயணித்தால் மீண்டெழலாம் - இவ்வாறு பொதுஜன பெரமுனவின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.** 11

## ஆங்கிலமொழி கற்கைக்கும் வாய்ப்பு ஏற்படுத்தித் தருக!



முன்னாள் எம்.பி. சரவணபவன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 17
எங்கள் பிரதேச இளையோருக்கு சிங்கள மொழியை மாத்திரமல்லாது ஆங்கில மொழியையும் கற்பதற்கான 09

ஒன்றுபட்டு நாட்டை மீட்டது போல

## தேசிய ஒற்றுமைக்கான பயணத்திலும் ஒன்றுபடுவோம்

கரு ஜயசூரிய அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17
சிங்களத் தலைவர்கள், தமிழ்த் தலைவர்கள், முஸ்லிம் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்துதான் வெள்ளையர்களிடமிருந்து எமது நாட்டை மீட்டெடுத்தோம். அதேபோல் தேசிய ஒற்றுமைக்கான 09

முச்சந்தி முரளி



"உவ்வளவு பேர் போராடின பிறகும் மாறாதவைக்கு புண்ணாக்கு வைச்சால் மட்டும் புத்தி வந்திடுமோ?"

## ராஜபக்சக்களின் மீளெழுச்சி: கொந்தளிக்கின்றனர் மக்கள்

### மஹிந்தவின் கூட்டத்துக்கு புல்லு, 'புண்ணாக்கு' வைத்து எதிர்ப்பு

### போராட்டக்காரர்களை கூட்டாக அள்ளிய பொலிஸ்

கொழும்பு, ஒக். 17
மக்கள் எழுச்சியால் முடங்கிய ராஜபக்சக்களை, அரசியல் ரீதியில் மீளெழுச்சி கொள்ள வைத்து ,அவர்களின் முதுகில் ஏறி அரசியல் சவாரி செய்வதற்கு பொதுஜன பெரமுன உறுப்பினர்களால் முன்னெடுக்கப்படும் நகர்வுக்கு மக்கள் மத்தியில் இருந்து எதிர்ப்பு கிளம்ப ஆரம்பித்துள்ளது. இதன் ஓர் அங்கமாக மஹிந்த ராஜபக்ச தலைமையில் நாவலப்பிட்டியவில் நேற்று நடைபெற்ற கூட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, பேரணி 10

## கைதடியிலுள்ள சித்த மருத்துவ அலகை கொழும்பு பல்கலையுடன் இணைக்க முயற்சி

### அமைச்சரவைப் பத்திரம் இன்று வருகிறது

யாழ்ப்பாணம், ஒக். 17
கைதடியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகு உட்பட நாட்டிலுள்ள அனைத்து சித்த மற்றும் ஆயுள்வேத உயர்கல்வி நிலையங்களையும் கொழும்புப் பல்கலைக்கழகத் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ரணிலை நெருக்கடிகள் சூழும்

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 17

**அமெரிக்காவின் ஆலோசனைகளுக்கு முன்னுரிமை வழங்கியதால் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அரசியல் சூழ்ச்சியால் பதவி துறந்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் வெகுவிரைவில் நெருக்கடிக்குள்ளாவார். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் மேலும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

மாத்தறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார நெருக்கடி அரசியல் ரீதியில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவிடம் பலமுறை எடுத்துரைத்தோம்.பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

மாறாக விளைவுகளை முன்கூட்டியதாக எடுத்துரைத்த நாங்கள் அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டோம். மேற்குலக நாடுகளின் கட்டளைகளுக்கு அடிபணியப் போவதில்லை எனக் குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய இறுதியில் அமெரிக்காவின் ஆலோசனைக்கமைய செயற்பட ஆரம்பித்தார்.

இறுதியில் மக்கள் போராட்டத்தின் ஊடாக பதவிவிலக நேரிட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவின் கட்டளைக்கமைய செயற்படுகிறார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது மாத்திரமே பொருளாதார மீட்சிக்கான இறுதித் தீர்வாக அமையும் என அவர் குறிப்பிடுகிறார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய வரி அதிகரிப்பு வீதம் சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர் கிடைப்பது தற்போது பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஒரு போதும் நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்காது.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளால் மேலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மக்களைப் பொருளாதார நெருக்கடிக்குள்ளாக்கி, மக்கள் போராட்டத்தைத் தீவிரப்படுத்தி தேசியத்தை பலவீனப்படுத்தும் முயற்சிகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (ம)

# என்னசெய்ய வேண்டுமென அறிந்துள்ளார் ஜனாதிபதி!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 17

நீங்கள் ஜனாதிபதியை விரும்பலாம், விரும்பாமலிருக்கலாம் ஆனால், என்ன செய்யவேண்டும் என்பதை ஜனாதிபதி நன்று அறிந்துவைத்துள்ளார் இவ்வாறு தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் ஒரே குரலில் பேசவேண்டும் என நான் கருதுகின்றேன். பாதுகாப்புத் தரப்பினர், நீதி அமைச்சு, ஜனாதிபதி அலுவலகம், வெளிவிவகார அமைச்சு ஆகியன தீர்மானங்களை எடுக்கும்போது அனைத்து விடயங்களையும் கருத்திலெடுக்கவேண்டும். தேவையற்ற விதத்தில் இலங்கையை எந்தத் தரப்பினரும் விமர்சிப்பதற்கு இடமளிக்காத விதத்தில் தீர்வைக் காணவேண்டும்.

இலங்கை அரசாங்கம் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு பொதுமக்களும் அதற்கு காலஅவகாசத்தை வழங்கவேண்டும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 வீத வரி அறவீட்டை மாத்திரம்வைத்து நாட்டை எவ்வாறு நிர்வகிப்பது? எங்கள் ஏற்றுமதி வருமானம் 14 வீதமாகக் குறைவடைந்துள்ளது. நாங்கள் பயணிக்கும் திசையை மாற்றவேண்டும். கடினமான முடிவுகள் எடுக்கப்படுகின்றன. ஜனாதிபதி பொருளாதார விடயங்களில் திறமையானவராகக் காணப்படுவது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். பரந்துபட்ட அடிப்படையில் விடயங்களைச் சிந்தித்து அவர் தீர்மானங்களை எடுக்கின்றார் - என்றார். (ம)



# முச்சக்கர வண்டிகளுக்கு இனி கூடுதல் எரிபொருள்

## வலுசக்தி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 17

எதிர்வரும் வாரங்களில் முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டு அளவு அதிகரிக்கப்படும் என வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

வலுசக்தி அமைச்சில் நேற்றுமுன்தினம் 15ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது சகலவிதமான வாகனங்களுக்குமான எரிபொருள் விநியோகம் 60 சதவீதமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் முச்சக்கரவண்டிச் சாரதிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்களுக்குரிய எரிபொருளின் அளவை அதிகரிப்பது தொடர்பில் ஜனாதிபதி ஆலோசனையளித்துள்ளார்.

அதற்கமைய முச்சக்கரவண்டிகளை வைத்திருப்பவர்கள் தொடர்பான தரவுகளைச் சேகரிக்கும் பணிகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தப் பணிகள் நிறைவடைந்த பின்னர் எதிர்வரும் ஓரிரு வாரங்களுக்குள் முச்சக்கரவண்டிகளுக்கு வழங்கப்படும் எரிபொருள்களின் அளவு அதிகரிக்கப்படும் - என்றார். (ச-இ)

# 200 மில். டொலரை இலங்கை செலுத்தும்

## பங்களாதேஷ் நம்பிக்கை

கொழும்பு, ஒக். 17

இலங்கை உரியநேரத்துக்குள் இருநூறு மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையை திரும்பிச் செலுத்தும் என அந்த நாட்டு மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனையின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட இருநூறு மில்லியன் அமெரிக்க டொலர் தொகையை மீளச் செலுத்துவதற்கு நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இரண்டு தடவைகள் கடன் காலம் நீடிக்கப்பட்டது.

இந்தநிலையில் இந்தத் தொகை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குமுன் செலுத்தப்படவேண்டும். இதுதொடர்பில் இலங்கை மத்திய வங்கி ஆளுநருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் சாதகமான பதில் கிடைத்துள்ளது. இலங்கை உரியநேரத்தில் கடனை மீளச்செலுத்தும் என நம்புகிறோம்- என்றார். (ச-இ)

# விகாரைக்குச் சென்ற சிறுமி துஷ்பிரயோகம்

## பிக்கு கைதானார்

கொழும்பு, ஒக். 17

விகாரைக்கு வழிபடச் சென்ற 14 வயதுச் சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் பிக்கு ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

மாத்தறை, புகுல்வெல்லவி விகாரையிலுள்ள 28 வயதுடைய பிக்கு ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை பிரதேச சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்துக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# நாட்டில் பொருளாதார நெருக்கடி திட்டமிட்டே தீவிரமாக்கப்பட்டது!

## வீரசுமன வீரசிங்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 17

திட்டமிட்ட வகையில் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி தீவிரமாக்கப்பட்டுள்ளது. இந்த நெருக்கடி நிலைமையை மேற்குலக நாடுகள் தற்போது தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறன - இவ்வாறு கம்யூனிச கட்சியின் பதில் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2020ஆம் ஆண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் மக்களின் ஆதரவுடன் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

ஆனால், மக்களின் எதிர்பார்ப்புக்கமைய கோத்தாபய அரசு செயற்படவில்லை. பொருளாதாரக் கொள்கை குறித்து அவதானம் செலுத்தாமல் தான்தோன் [illegible] ஊழல் செயற்பாடுகளில் [illegible] செலுத்தப்பட்டுள்ளது. அதன் இறுதி விளைவு பாரதூரமானதாக அமைந்தது. அரசாங்கத்தின் தவறுகளை அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டு சுட்டிக்காட்டினோம். எமது ஆலோசனைகளுக்கு அரசாங்கம் மதிப்பளிக்கவில்லை. அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் கொள்கைத் திட்டங்களை வெகு விரைவில் வெளிப்படுத்துவோம். இடதுசாரி அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து மேலவை இலங்கைக் கூட்டணியை பலப்படுத்துவோம்- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்துடைப்பு நாடகம்தான் நல்லிணக்க ஆணைக்குழு!

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை அமைப்பதற்கு மேற்கொள்ளப் படும் முயற்சிகள் அனைத்தும் குற்ற வாளிகளைத் தப்பிக்கச் செய்வதற்கான ஒரு நாடகமே. இதனைப் பாதிக்கப்பட்ட தரப்பு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் தலைவரும் யாழ். மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாட்டில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்று அமைக்கப் படும் பட்சத்தில், அதுகுறித்த அபிப்பிரா யம் என்னவென்று வினவியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் மேற்குறிப்பிட்ட வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்னாபிரிக்காவில் உருவாக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவானது தோல்வியடைந்த ஒரு பொறிமுறையென அதற்குத் தலைமை தாங்கிய டெஸ்மன்ட் டுட்டு கூறியிருக்கின் றார்.

ஏனெனில், அதனூடாக குற்றவாளி களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கை யும் எடுக்கப்படாமல், குற்றவாளிகள் தப்பித்துக்கொள்வதற்காக அது பயன் படுத்தப்பட்டது என்று அவர் சுட்டிக்காட்டி யிருக்கின்றார்.

இவ்வாறான ஆணைக்குழுவின் ஊடா கக் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங் கப்படலாம். ஆனால், குற்றங்களை மூடி மறைப்பதற்காக அதனைப் பயன்படுத் தக்கூடாது என்பதே அவரது கருத்தாக இருக்கின்றது. அதேபோன்று தென்னா பிரிக்காவில் கறுப்பினத்தவர்களின் போராட்டம் வெற்றியடைந்து, நிலை மாற்றமொன்று இடம்பெறும் இடைக் காலத்திலேயே இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப் பட்டது. ஆனால், இலங்கையைப் பொறுத்தமட்டில் அத்தகைய நிலைமாற் றம் எதுவுமில்லை. மாறாக, இங்கு இனப்படுகொலையின் ஊடாகப் போராட் டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

அவ்வாறிருக்கையில், தற்போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதை குற்றவாளிகளைத் தப்பிக் கச் செய்வதற்கான ஒரு நாடகமாகவே நாம் கருதுகின்றோம். பாதிக்கப்பட்ட தரப்பினரும் இதனை ஒருபோதும் ஏற் றுக்கொள்ளமாட்டார்கள். கடந்தகால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்யாமல், ஆனால், அதனை உறுதிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதுபோல காண்பித்து, சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பித் துக்கொள்வதை முன்னிறுத்தி மேற் கொள்ளப்படுகின்ற முயற்சியே இது வாகும் - என்றார். (ம)

# துவிச்சக்கரவண்டி திருடியவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 17

நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலய வழிபாட்டுக்கு வந்தவரின் துவிச்சக்கர வண்டி யைத் திருடிய கொக்குவிலைச் சேர்ந்த 55 வயது சந்தேகநபர் எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

புரட்டாதி சனி விரதத்தை முன்னிட்டு ஆலயத்துக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகளவான பக்தர்கள் வந்திருந்தனர். ஆலயத்துக்கு வந்த ஒருவரின் துவிச்சக் கரவண்டியை சந்தேகநபர் திருடிச் சென்றுள்ளார். அந்தக் காட்சி சிசிரிவியில் பதிவாகியுள்ளது. அதனை விற்றுவிட்டு மீண்டும் ஆலயத்துக்கு வந்த சந்தேகநபர் தனது துவிச்சக்கரவண்டியை எடுத்துச் செல்ல முற்பட்டபோது கைது செய்யப்பட் டார். (அ-ஒ-26)


## வேலை வாய்ப்பு

உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கு
பின்வரும் பணியாளர்கள் தேவை



- வரவேற்பாளர்கள்
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)
- கணினி பக்க வடிவமைப்பாளர்கள் (முழுநேரம் / பகுதி நேரம்)

திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்

சுயவிபரக்கோவையுடன் இன்று (17.10.2022) திங்கட்கிழமை
முற்பகல் : 10.00 - மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை
நேரில் வரவும்.

(CR 38100) (3/6)

உதயன் பிரதான காரியாலயம்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# அனைவரின் இணக்கப்பாட்டுடன்தான் நல்லிணக்க ஆணைக்குழு அமையுமாம்

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 17

உண்மையைக் கண்டறியும் பொறி முறை ஒன்றையோ அல்லது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றையோ அமைக்க வேண்டுமெனில், அதற்கு முன்னதாக அதனுடன் தொடர் புடைய சகல தரப்பினரதும் இணக்கப் பாட்டை பெறவேண்டிய தேவை இருக்கின் றது. எனவே, அதனைச் செய்யாமல், வெறுமனே ஆணைக்குழுவை அமைப் பதில் பயனில்லை.

இவ்வாறு தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.

நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ் தலை மையிலான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை கிடைக்கப்பெறும் வரையில் இந்த விடயங்கள் தொடர்பில் கலந்தா லோசித்து வருகின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப் புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மற்றும் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து ஆராய்தல், புலனாய்வு செய்தல், அறிக் கையிடல் மற்றும் அவசியமான முன் மொழிவுகளை செய்தல் ஆகியவற்றுக் காக உயர்நீதிமன்ற நீதிபதி, நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர், அதனை அடிப்படையாகக் கொண்டு உள்ளக ரீதியில் உண்மை யைக் கண்டறியும் பொறிமுறை யொன்றை ஸ்தாபிக்கவிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து மேற்படி ஆணைக்குழுவில் முன்னிலையான இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் தென்னா பிரிக்காவில் ஸ்தாபிக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பில் விளக்கமளித்தமையை அடுத்து இந்த விடயம் பேசுபொருளாக மாறியிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார் அலி சப்ரி.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை ஸ்தாபிக்கவேண்டிய தேவைப் பாட்டை அரசாங்கம் கொண்டிருப்பதால் அதுகுறித்து ஆராய்ந்து வருகின்றோம். இருப்பினும் அதற்கு முன்னதாக வடக்கு மற்றும் தெற்கு மக்கள் உள்ள டங்கலாக சகல தரப்பினரதும் இணக் கப்பாட்டைப் பெறவேண்டிய தேவை உள் ளது. இவ்வாறானதொரு ஆணைக் குழுவை ஸ்தாபிப்பதற்கு புதிய சட்டங்களை இயற்றவேண்டுமா? அல்லது ஏற்கனவே நடைமுறையிலுள்ள சட்டங்களின் கீழ் ஸ்தாபிக்கமுடியுமா? என்பது குறித்தும் ஆராய்ந்து வருகின்றோம் என்று அலி சப்ரி மேலும் தெரிவித்தார். (ம)


## முதலாம் ஆண்டு நினைவுதினம்



தோற்றம் 15.10.1934
மறைவு 12.10.2021

அமரர் S.T. பத்மநாதன் -J.P

(ஓய்வுநிலை பிரதிப் பணிப்பாளர்
விவசாயத் திணைக்களம் - வட கிழக்கு மாகாணசபை)

எமது வாழ்வுக்கும் வளத்துக்கும்
உழைத்த எமது குடும்பத் தலைவரை
நினைவு கூருகின்றோம்.

ஓம் சாந்தி !

169, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவின் மறைந்த முன்னாள் குடியரசுத்தலைவர் ஏ.பி.ஜே.அப்துல் கலாமின் 91ஆவது பிறந்த தின நிகழ்வு யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில், யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், பொதுசன நூலக பிரதம நூலகர் மற்றும் இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர். (ய-20)



# பௌத்த - இந்து மத குருமார்கள் சங்கமம்

கொழும்பு, ஒக். 17

கண்டி கன்னொருவையைச் சேர்ந்த பௌத்த தேரர்கள் பக்தர்கள் சகிதம் மட்டக்களப்புக்கு நேற்று பயணம் செய்தார்கள்.

மட்டக்களப்பிலுள்ள பேரின்பஞான பீடத்தில் சுவாமி ஆன்மீக ஜெகத்குரு மகாயோகி புண்ணியரெத்னம் குருக்களைச் சந்தித்து பக்தர்களோடு கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

சந்திப்பின்போது பௌத்த, இந்து மத சமய கலாசார பாரம்பரியங்கள் பற்றியும் வணக்க வழிபாடுகள் பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. (ம)

# வாசிப்பு மாதத்தில் நூலகக் கண்காட்சி



வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வரணி பொதுநூலகத்தால் நடமாடும் நூலகக் கண்காட்சி மற்றும் வாசிப்பு முகாம் செயற்பாடுகள் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டன. மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், மந்துவில் றோ.க.த.க. வித்தியாலயம், இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை, கரம்பை அ.மி.த.க. பாடசாலை, கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலை, வரணி வடக்கு அ.த.க. பாடசாலை, நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம், இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம், வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம், குடமியன் அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளில் நடமாடும் நூலக சேவை இடம்பெற்றது. (ய-159)



பளை - தர்மக்கேணி அ.த.க. பாடசாலை மாணவர்களின் கற்றல் உபகரணங்கள் காட்சிப்படுத்தும் நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ய-9)



சூரிய நிறுவகத்தால் நடத்தப்படும் இலவச சிங்கள மொழிக் கற்கைநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்குரிய சான்றிதழ்கள் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. சூரிய நிறுவகத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் தே.பிரேமராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ய-27-125)



வலிகாமம் கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவுநகர் (கோப்சிற்றி) அண்மையில் கோப்பாய் தெற்கில் திறந்து வைக்கப்பட்டது. சங்கத்தலைவர் ப.இராசேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தேவந்தினி பாபு கலந்துகொண்டார். (ம-14-9)



மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகத்தால் சண்டிலிப்பாய் கோட்டத்துக்குட்பட்ட புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. (ய-125)

## நாட்டில் பரவலாக மழைக்கு சாத்தியம்

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து மணித்தியாலத்துக்கு 25-35 கிலோ மீற்றர் வேகத்திலும், காலியிலிருந்து மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புக்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 45-50 கிலோ மீற்றர் வேகத்திலும் வீசக்கூடும். காலியிலிருந்து மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புக்கள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் என்றுள்ளது. (ய-இ)



வரணி மத்திய கல்லூரியின் ஆங்கிலத்தின விழா, கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. கல்லூரி அதிபர் அ.தங்கவேலு தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் பி.முரளிதரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் ஆங்கிலப் பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி எஸ்.சிறிதரன், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ம-14-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பருவத்தே உரம் வழங்குக!

இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கும், அரசியல் குழப்பங்களுக்கும் பிள்ளையார் சுழி போட்ட விடயம் இரசாயன உரவகைகளுக்கு கோத்தாபய கொண்டு வந்த திடீர் தடையுத்தரவுதான். அதன் பின்னர்தான் விவசாயிகளும், அவர்களைத் தொடர்ந்து மக்களும் வீதிக்கு வந்து போராடும் நிலைமை உருவானது. இரசாயன உரவகைகளால் பல பாதிப்புக்கள் வருகின்றன என்பதும், மீண்டும் இயற்கை விவசாயமுறைமைக்குத் திரும்ப வேண்டுமென்பதும் ஆரோக்கியமான விடயங்களே. ஆனால், மிக நீண்டகாலமாக இரசாயன உரவகைகளையே விளைச்சலுக்காக நம்பியிருக்கும் இலங்கை விவசாயிகளிடம், இயற்கை உரப்பாவனை தொடர்பான மாற்றத்தை படிப்படியாகவே கொண்டுவந்திருக்கவேண்டும். அதைவிடுத்து 'எடுத்தோம்; கவிழ்த்தோம்' என்ற ரீதியில் கோத்தாபய தடையுத்தரவை விதித்தமைதான் எல்லாவற்றையும் குழப்பியடித்து விட்டது. அந்த உரத்தடை காரணமாக கடந்த பெரும்போக மற்றும் சிறுபோக அறுவடைகள் எதிர்பார்த்த விளைச்சலைத் தரவில்லை. அதனால் அரிசியின் விலையும் பல மடங்கு ஏறிவிட்டது.

இந்த நிலையில் கடந்தகாலத் தவறுகளைத் தொடராமல், இரசாயன உரப்பாவனைக்கு மீண்டும் ரணில் அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. இதனைத் தொடர்ந்து உரவிநியோகம் சம்பந்தமான பதிவுகளும், விநியோக நடவடிக்கைகளும் பரவலாக ஆரம்பித்துள்ளன. ஆனால், இதிலுள்ள சிக்கல் என்னவென்றால் விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை ஒரே கட்டமாக வழங்காமல் பல கட்டங்களாகப் பிரித்து வழங்கவுள்ளதாக விவசாய அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு பல கட்டங்களாக உரத்தை வழங்குவதால் உரிய காலத்தில் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது. உதாரணமாக ஒருவரின் காணியில் விதைக்கப்பட்ட நெற்பயிருக்கு 40 கிலோ யூரியா விசிற வேண்டியிருப்பதாக வைத்துக்கொண்டால், அவருக்கான குறித்த உரம் தலா 10 கிலோ வீதம் நான்கு கட்டங்களாக வழங்கினால் அவர் கடைசிக்கட்ட உரம் கிடைக்கும் வரை உரத்தை வயலுக்குப் போடாமல் காத்திருக்கவேண்டும். ஆனால், அதற்குள் பருவம் தப்பிவிடும். 'பருவத்தே பயிர்செய்' என்பது விவசாயத்துக்கான அடிப்படைகளில் முக்கியமானது. அவ்வாறு பருவம் தப்பியபின்னர் வயலுக்கு உரத்தைப் போட்டாலும் உரிய பலன்கிடைக்கப் போவதில்லை. அதைவிட விவசாயிகள் வயலுக்குள் நிற்கும் நேரத்தை விட உரத்தைப் பெறுவதற்காக விவசாயக் கந்தோர்களின் முன்னால் நிற்கும் நேரம்தான் அதிகமாக இருக்கப்போகின்றது.

'கொடுத்தும் கெடுத்தான்' என்கிற கதையாக உரத்தைக் கொடுத்தும் கூட, அதனைச்சரிவரப் பயன்படுத்த முடியாத வகையில் கட்டம் கட்டமாக விநியோகம் செய்வதால் மீண்டும் பழையபடி அறுவடையில் அது தாக்கத்தை ஏற்படுத்தவே செய்யும். இதனால் நெல்லின் விலை இன்னும் உயரும். அதற்குத்தான் இந்த அரசாங்கம் ஆசைப்படுகின்றதா? இரசாயன உரத்தை விவசாயிகளுக்கு வழங்குவதென முடிவு செய்தாகிவிட்டதால், தேவையான அளவு உரத்தைக் கணக்கிட்டு, இறக்குமதி செய்து அதனை விவசாயிகளுக்கு ஒரே தடவையில் விநியோகிப்பதன் மூலம் கடந்த பெரும்போகத்தில் விட்ட தவறை ஓரளவுக்கேனும் ஈடுசெய்யமுடியும். அவ்வாறு விவசாயிகளுக்கு பருவம் தப்ப முன்னர் உரத்தை வழங்கினால், விளைச்சல் அதிகரித்து நெல்லின் விலை சரியும். இதன் சங்கிலிவட்டப் பாதையில் அரிசிவிலை, உணவுவகைகளின் விலை என்பனவும் குறைவடையும். கொஞ்சமேனும் உள்ளூர் பொருளாதாரத்தைப் பலப்படுத்தவும் வாய்ப்புக்கிட்டும். இவ்வாறான பலமுனைகளில் பலப்படுத்துவதன் மூலமே இலங்கையின் பொருளாதாரத்தை நிமிர்த்தமுடியும் என்பதை அரசாங்கம் உணரவேண்டும். அப்படி உணர்வதோடு விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை குறித்த காலப்பகுதிக்குள் அவர்களுக்கு கிடைக்கக்கூடியவாறு செய்தல் வேண்டும். செய்யுமா ரணில் அரசாங்கம்?

நாளொரு நல்வார்த்தை

"ஒவ்வொரு நாளும் வித்தியாசமான ஒன்று. ஒவ்வொரு நாளையும் ஒரே மாதிரியாகப் பார்த்தால் நீங்கள் குருடரே"
- பௌலோ கொய்லோ



# கிளர்ச்சிகளை ஒடுக்கவே ரணிலுக்கு நாம் ஆதரவு!

## மனித உரிமைகளைச் சிந்திக்கார் நாமல் ராஜபக்ச எம்.பி. புகழாரம்

**கொழும்பு, ஒக். 17**

**பயங்கரவாதத்துக்கு முகங்கொடுக்கும் ஆளுமை மஹிந்த ராஜபக்சவிடம் இருப்பதுபோல, கிளர்ச்சிகளை ஒடுக்கும் திறனும் அனுபவமும் ஜனாதிபதி ரணிலிடம் உள்ளது. அதனால்தான் அவருக்கு ஆதரவு வழங்கி வருகின்றோம் என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தற்போதைய ஜனாதிபதி முன்னர் இருந்த ரணில் விக்கிரமசிங்க அல்லர். அவர் மாறிவிட்டார். மேற்குலகுக்கு ஆதரவாக செயற்பட்ட அவர், இன்று அவ்வாறுஇல்லை. முன்னர்மனித உரிமைகள்பற்றி அதிகம் கதைப்பார். தற்போது அவர் அவ்வாறு கதைப்பதில்லை. கோத்தாபய ராஜபக்ச மனித உரிமைகள்பற்றி சிந்தித்தாலும் ரணில் சிந்திப்பதில்லை. காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை சிறப்பான முறையில் அகற்றினார். அதேபோல வெளிநாட்டுத் தூதரகங்களின் சொற்படி செயற்படுவதும் இல்லை.
பயங்கரவாதத்துக்கு முகங்கொடுக்கும் ஆளுமை மஹிந்தவிடம் இருப்பது போல, கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்திய அனுபவம் ரணிலுக்கு உள்ளது. அதனால்தான் அவரை ஆதரிக்கின்றோம் -என்றார். (ம-44)

# அரசாங்கத்துக்கு எதிராக 200,000 பேரே போராடினர்

## பெரமுனவின் பொதுச் செயலர் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஒக். 17
2 லட்சம் பேர்வரையே அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்றனர் என புலனாய்வுப் பிரிவு பிரதானி புள்ளி விவரங்கள் சகிதம் சுட்டிக்காட்டினார் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
புலனாய்வுப் பிரிவு பிரதானி, நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து தகவல்களை வெளியிட்டார். அவரிடமுள்ள தரவுகளுக்கமைய 2 லட்சத்துக்கும் குறைவானவர்களே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அந்தப் போராட்டத்துக்கு அஞ்சியே நாம் பின்வாங்கினோம். இதன் பின்னணியில் சூழ்ச்சியும் உள்ளது' என்று அவர் மேலும் தெரிவித்தார்.
அதேவேளை, இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கோத்தாபய ராஜபக்ச சென்றது நல்லது. அவர் திருப்பி அடித்திருந்தால் இளைஞர்கள் பலியாகியிருப்பார்கள். விமல், கம்மன்பில, டலஸ் போன்றவர்கள் சூழ்ச்சி செய்தனர். அடுத்த தேர்தலில் அவர்கள் குப்பைத் தொட்டியில் விழுவார்கள் - என்றார். (ம-44)

நாளை
18.10.2022
செவ்வாய்க்கிழமை
ஐப்பசி 1
சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம்: 03.02 - 04.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி ஓரமாக சிறுப்பிட்டி வடக்கு சிறுப்பிட்டியில் காணி விற்பனைக்கு உண்டு. வியாபார நிலையங்கள், எரிபொருள் நிரப்பு நிலையம், உள்ளிட்ட கைத்தொழில் முயற்சிகளுக்குப் பொருத்தமான காணியாகும். அத்துடன் மடத்தடி வீதியிலும் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது. விலை பேசித் தீர்மானிக்கலாம். தரகர்கள் தேவையில்லை. (CS 1040) (3/6)

தொடர்பு : 076 769 4449

## சீரற்ற வானிலை: 55,000 பேர் பாதிப்பு!

11 மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக 55 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன்படி, 13 ஆயிரத்து 902 குடும்பங்களைச் சேர்ந்த 55 ஆயிரத்து 435 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ம)

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.
# வழங்குநர்களைப்பதிவுசெய்தல் - 2023

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2023ஆம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்படும் பொருட்கள். சேவைகள். வேலைகள் வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்தக் காரர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**a. Supply Categories**

| S.No | Supplies | Categories | | | Non Refundable Fees Rs. | Link | QR Cord |
|---|---|---|---|---|---|---|---|
| | | Items | Main Items | Sub items | | | |
| 1 | Goods | GA to GQ | 17 | 103 | 300/=(10 Items) | https://forms.gle/yogCfTftyCeDJqnVA | |
| 2 | Services | SA to SD | 04 | 31 | 300/=(10 Items) | https://forms.gle/J9rx2MCdfNBYezR36 | |
| 3 | Works | WA to WC | 03 | 19 | 3,000/= | https://forms.gle/PyEpiDUmUfV1CQpg9 | |

**b. Supply Details**

**1. Supply of Goods**

**GA. Agricultural Items**
GA01. Agriculture Equipment, Tools
GA02. Fertilizers
GA03. Seeds, Seeding, Saplings
GA04. Poly Sack Bags
GA05. Animals for Self-Employment (chicks, cows, goats)

**GB. Cloth Items**
GB01. Bed sheets, Pillow, Pillow Covers
GB02. Curtains
GB03. Dresses for Men, Women
GB04. Other Type of Cloths
GB05. Table Cloth, Golden Cloth, Carpets
GB06. Uniform, Uniform Materials
GB07. Foot Wares, Rain Coats)

**GC. Consumable Items**
GC01. Cleaning Equipment
GC02. Cleaning Items
GC03. Other consumable Items

**GD. Contract Materials**
GD01. Aluminum Partition, Fitting
GD02. Cement
GD03. Gravel Sand
GD04. Hard Ware Items
GD05. Paints
GD06. Plumping Goods
GD07. Roofing Materials
GD08. Random Rubble for Rip Rap
GD09. River Sand
GD10. Silt soil
GD11. Stones
GD12. Tiles & Marbles
GD13. Timber
GD14. Water Tanks

**GE. Electrical Equipment**
GE01. Air Conditioner
GE02. Electric Goods for Home
GE03. Electric Goods for Office
GE04. Electric Motor Pump
GE05. Freezer
GE06. Goods for Electrical Connection
GE07. P.V.C Pipe Varieties
GE08. Sound, Light Equipment
GE09. Sewing Machine
GE10. Transformer
GE11. T.V, Mic, Speakers, etc.

**GF. Electronic Items**
GF01. Alarm Solution
GF02. CCTV
GF03. Camera and Equipment
GF04. Desk Tops Computer, Lap Tops, Spare Parts
GF05. Fax
GF06. Intercom System
GF07. Multi Media Projector, Smart board
GF08. Network Services
GF09. Printer
GF10. Photo Copier, Spare Parts
GF11. Roneo Machine
GF12. Toner, Ribbon, Ink Cartridge
GF13. Video Recorder

**GG. Fancy Goods**
GG01. Fancy Items.
GG02. Foot Wear
GG03. Home Usage Product
GG04. Leather Goods

**GH. Food Items**
GH01. Biscuits
GH02. Cereal Products
GH03. Locally Product Food Item
GH04. Milk Powder, Disposable Cups
GH05. Non-Vegetarian (Break Fast, Lunch, Dinner)
GH06. Short Eats
GH07. Soft Drinks
GH08. Vegetarian (Break Fast, Lunch, Dinner)
GH09. Water Bottles

**GI. Furniture**
GI01. Chairs Knitting
GI02. Mattress, Covers
GI03. M.D.F Furniture
GI04. Plastic Furniture
GI05. Steel Furniture
GI06. Wood Furniture

**GJ. Fishing Equipment**
GJ01. Boat Engine, Tools, Spare Parts
GJ02. Fishing Boat
GJ03. Fishing Net, Rope, Twine
GJ04. Other Fishing Relative Goods

**GK. Machineries, Spare Parts**
GK01. Equipment for Aluminum Fitting, Glass, Ply wood, MDF
GK02. Equipment for Welding Works
GK03. Equipment for Carpenter Works
GK04. Equipment for Masonry Works
GK05. Generator, Spare Parts
GK06. Water Pump, Spare Parts
GK07. Other Machineries, Spare parts

**GL. Medical Equipment**
GL01. Baby Needs
GL02. Furniture for Medical
GL03. Medical Equipment
GL04. Medical Drugs
GL05. Pharmaceuticals Products
GL06. Other Medical Products

**GM. Stationaries**
GM01. School Bags
GM02. Stationaries - office

**GN. Solar Systems**
GN01. Solar Systems, Spare Parts.
GN02. Solar On Grid, Off Grid System
GN03. Solar System

**GO. Sports Items**
GO01. Equipment for Gymnasium
GO02. Musical Instrument
GO03. Prizes for Winners
GO04. Sports Equipment
GO05. Sports Uniform, T-shirts

**GP. Vehicle Relative Goods**
GP01. Vehicle batteries, spare parts
GP02. Vehicle Tires, tubes
GP03. Other Vehicle spare parts

**GQ. Water Filter**
GQ01. Water Filter, Spare Parts

**2. Supply of Services**

**SA. Contract Equipment Hiring**
SA01. 3 Cube Tipper
SA02. D2 Dozer
SA03. D3 Dozer
SA04. PC30 Excavator
SA05. 10 Ton Pad Foot Roller
SA06. 15 Ton Pad Foot Roller

**SB. Printing**
SB01. Banner Printing
SB02. Book Binding
SB03. Office ID
SB04. Office Files
SB05. Plastic Name Board
SB06. Rubber Stamp, Date Stamp
SB07. Screen Printing, Off-set Printing, Digital Printing

**SC. Vehicles**
SC01. Vehicle Maintenance, Service
SC02. Vehicle Lease, Rent
SC03. Vehicle Tinkering
SC04. Vehicle Mechanical
SC05. Vehicle Interior, Upholstery
SC06. Vehicle Air Condition
SC07. Vehicle Insurance

**SD. Virtual Services**
SD01. Cleaning Services
SD02. Electronic Items Maintenance on Spare Parts Repair
SD03. Electrical Items Maintenance on Spare Parts Repair
SD04. Event Management
SD05. Furniture Maintenance, Repair
SD06. Machineries Maintenance, Repair
SD07. Photo Copier Computer System Printers Maintenance, Repair
SD08. Intercom, CCTV Maintenance, Repair
SD09. Refrigerator, Air conditioner Maintenance, Repair
SD10. Security Service
SD11. Software Developing

**3. Supply of Works**

**WA. Contractors**
WA01. Building
WA02. Bridges
WA03. Dredging, Reclamation
WA04. Highway, Road
WA05. Irrigation, Drainage Canal
WA06. Maritime Construction
WA07. Storm Water Disposal, Land Drainage
WA08. Water Supply, Sewerage

**WB. Electrical, Mechanical Services**
WB01. Electrical Installation (Low & Medium)
WB02. Elevators, Escalators, Travellators
WB03. Plumbing, drainage

**WC. Specialities**
WC01. Aluminum, Finishes
WC02. Carpentry, Joinery
WC03. Floor, Wall, Ceiling Finishes
WC04. Landscaping
WC05. Light Metal Work
WC06. Painting Work
WC07. Water Proofing
WC08. Welding Works

c பதிவுசெய்ய விரும்புபவர்கள் www.kilinochchi.dist.gov.lk எனும் இணை யத்தளத்தின் மூலம் பொதுவான நிபந்தனைகளுக்கு அமைய நிகழ் நிலை (Online) விண்ணப்பத்தினை பூரணப் படுத்தல் வேண்டும்.

d. பொருட்கள் சேவைகளுக்கான விண்ணப்பத்தை பூரணப்படுத்துவதற்கு பின் வரும் ஆவணங்கள் பதிவேற்றப் படுதல் வேண்டும்.

1. A3: - வதிவிடச்சான்று : மின்கட்டணப் பட்டியல். தண்ணீர் கட்டணப் பட்டியல். தொலைபேசி கட்டணப் பட்டியல். வங்கிக் கணக்கு புத்தகத் தின் பிரதி என்பவற்றில் ஏதேனும் ஒன்று.
2. B1.4: - வியாபாரப்பதிவுச்சான்றிதழ்
3. B4.3: - வங்கிக்கணக்கு புத்தகத்தின் பிரதி.
4. B6.4: - வங்கி வைப்புச்சிட்டை

e. வேலைக்கான விண்ணப்பத்தை பூரணப்படுத்த "d"ல் கூறப்பட்டதற்கு மேலதிகமாக கீழே கேட்டவற்றுக்கு "ICTAD" ஆவணத்திலிருந்து பதிவேற்றப்படுதல் வேண்டும்.

1. B8.1: - பதிவிலக்கம்
2. B8.2: - தரம்
3. B8.3: - புதுப்பித்தல்.

f. விண்ணப்பதாரியால் வழங்குநர்களைப் பதிவுக்கான வைப்பு பணத்தினை மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம் எனும் பெயரில் உள்ள 7041986 எனும் இலக்க இலங்கை வங்கி கணக்கிற்கு வைப்புச்செய்ய வேண்டும். (வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது)

g. முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பதிவு செய்யப்படவேண்டிய பத்து உபபொருட் தொகுதிக்கும். சேவைக்கும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா.300/- மேலதிகமாக கோரப்படுகின்ற ஒவ்வொரு பத்து உப பொருட் தொகுதிக்கும் அல்லது சேவைகளுக்கும் தனித்தனி விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத வைப்பு பணம் ரூபா 300/- வைப்பில் இடப்படல் வேண்டும்.

h. பதிவுக்காக நிகழ்நிலையில் (Online) பூரணப் படுத்திய விண்ணப்பத்தின் பிரதி நிகழ்நிலையில் (Online) பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்களின் பிரதி. மீளளிக்கப்படாத பண வைப்புப் சிட்டை என்பவற்றை 2022 நவம்பர் மாதம் 15ம் திகதி அல்லது அதற்கு முன்பதாக **"மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நேரடியாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் போது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "2023ம் ஆண்டிற்கான வழங்கு நர் களை பதிவு செய்தல்" என குறிப்பிடப்படல் வேண்டும்

i. பதிவுக்கான விண்ணப்பத்தினை பதிவேற்றம் செய்வதற்கு கிளிநொச்சி மாவட்ட செயலக அல்லது கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களின் நிதிக் கிளைகளில் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விபரங்களை "பிரதம கணக்காளர், மாவட்ட செயலகம் கிளிநொச்சியின் 021 228 5484 மற்றும் 0212285352 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**திருமதி. றூ.கேதீஸ்வரன்**
**மாவட்டச் செயலர்,**
**மாவட்டச் செயலகம்,**
**கிளிநொச்சி.**
**தொலை பேசி: - 0212285484,**
**தொலை நகல்: - 0212285352**
(CR 38273) (3/6)

சட்டவிரோதமான முறையில்

## பருத்தித்தீவில் 50 ஏக்கரில் கடலட்டைப் பண்ணை!

*மீனவ சமூகம் சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ். குடாக்கடலின் பருத்தித்தீவுக் கடலில் சுமார் 50 ஏக்கரில் சட்டவிரோத கடலட்டைப் பண்ணை அமைக்கப்பட்டு தொழில் இடம்பெற்று வருகிறது. இவற்றால் கடல்வளத்துக்கு பாதிப்பில்லையென முதலில் விஞ்ஞானபூர்வ உத்தரவாதத்தை அளியுங்கள் -இவ்வாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் சம்மேளனத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா விசனம் தெரிவித்துள்ளார்.

நீதியான சமூகத்துக்கான தேசிய இயக்கத்தில் ஏற்பாட்டில் 'சுபீட்சமான நாட்டுக்கான பாதை நல்லிணக்கமே' எனும் தொனிப்பொருளில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இன மற்றும் மத நல்லிணக்கத்துக்கான கூட்டமைப்பின் கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 50 ஆயிரம் கடற்றொழில் குடும்பங்களின் சார்பில் 2 இலட்சம் மக்களின் பிரதிநிதியாக எமது மீனவ சமூகம் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் தொடர்ச்சியாக பேசி வருகின்றோம். வடக்கில் அட்டைப் பண்ணைகள் என்ற போர்வையில் பாரம்பரியமாக செய்துவரும் கடற்றொழிலும் கடல் வளமும் அழிக்கப்படுகின்றன. இதனால் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குள்ளாகியுள்ளது.

யாழ்.குடாக் கடலின் பருத்தித்தீவுக் கடலில் சுமார் 50 ஏக்கரில் சட்டவிரோதக் கடல் அட்டை பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. அதனைத் தடுக்க வேண்டிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் மீனவ சமூகங்களைத் தூண்டிவிடும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

1972ஆம் ஆண்டுக் காலப்பகுதியின் பின்னர் வடகடல் ஆய்வு செய்யப்படாத நிலையில் கடற்பரப்புத் தொடர்பில் அறிய முடியாதுள்ளது. ஆகவே கடல் வளம் பாதிக்கும் அட்டை பண்ணைக்கான அனுமதியை வழங்குவது சரியா? அட்டைப் பண்ணையால் கடல் வளத்துக்கும் கடலுக்கும் பாதிப்பு இல்லையா? என விஞ்ஞானப்பூர்வமான உத்தரவாதத்தை தாருங்கள் - என்றார். (ச-27)

**வடமாகாண அதிபர்கள் சங்கம்**
**வருடாந்தப் பொதுக் கூட்டம்**

**காலம் : 23.10.2022 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : காலை 9.30 மணி**
**இடம் : சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி (பஸ் நிலையம் முன்பாக)**

**குறிப்பு :**

1. பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 22ஆம் திகதிக்கு முன் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.
2. புதிதாக இணைய விரும்புவோர் அன்றைய தினம் சமுகமளித்து சந்தாவைச் செலுத்தி இணைத்துக் கொள்ளவும்.

தலைவர்
திரு.வே.த.ஜெயந்தன்
யா/ வயாவிளான் மத்திய கல்லூரி,
வயாவிளான்

செயலாளர்,
திரு. சி. திரிகரன்
யா/ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி,
புத்தூர்

(CR 38301) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவில் ......

37ஆம் ஆண்டு நினைவு 1ஆம் ஆண்டு நினைவு



அமரர் கணபதிப்பிள்ளை சிவராசா

பிறப்பு 01.12.1940

இறப்பு 07.09.1985

அமரர் சிவராசா தனலட்சுமி

பிறப்பு 10.10.1946

இறப்பு 29.09.2021

பிரான்பற்றதனில்
இல்லறத்தில் நல்லறமாய்
இனிய செல்வங்களைப் பெற்று
இவ்வுலகில் இனிதாய் வாழ்ந்த
எம் தெய்வங்களின் இனிய
நினைவுகள் அகலாது வாழும்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்


(CS 47094) (3/6)

# 210லீற்றர் கோடாவுடன் சந்தேகநபர் பிடிபட்டார்!



கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 210 லீற்றர் கோடாவுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்பை மேற் கொண்ட கோப்பாய் பொலிஸார் குறித்த சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன. (ம-27)

# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் காசிப்பிள்ளை

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கினை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் காசிப்பிள்ளை 15.10.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - சின்னத்தங்கம் தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற செல்வேந்திரமணியின் கணவரும், சுமூகன் (பிரான்ஸ்), கஸ்தூரி (சுவிஸ்) அகியோரின் தந்தையும், கீதா (பிரான்ஸ்), கிருஷ்ணதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், கஜானன், கஜீகரன், பிரியசகி (பிரான்ஸ்), அதீஸ், சாதுயா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்துக்கல்லூரி அருகாமை
உரும்பிராய் வடக்கு.

தகவல்: குடும்பத்தினர்
076 869 0499

# மரண அறிவித்தல்



பிறப்பு 07 . 03 . 1958

இறப்பு 16 . 10 . 2022

## இலங்கராஜா இந்திராதேவி

ஆசாரி வீதி, கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கராஜா இந்திராதேவி நேற்று (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராசா - பரமேஸ்வரி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற மாணிக்கம் - ஜெகசோதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இலங்கராஜா (ஓய்வுபெற்ற சுகாதார உத்தியோகத்தர் - யாழ். பல்கலைக்கழக பகுதி) அவரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் நாதன் (துர்க்கா கடைச்சல் தொழிலகம்), காலஞ்சென்ற கமலேந்திரன் (ராசு - பிள்ளையார் கடைச்சல் தொழிலகம்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற தங்கவடிவேல் மற்றும் குதுகலகுமாரி, காந்திமதி, புஸ்பலீலா, லோகேந்திரன், இந்திராணி, ரஞ்சிதமலர், சகுந்தலா ஆகியோரின் மைத்துனியும், ஜெகன் (மகா அலுமினியம் பிற்றிங்), நாகதாரணி சிவநேசன், விஜிதா, சதீஸ்குமார் சுஜிதா, காண்டீபன், றஜிதா (பிரான்ஸ்) ஆகியோரின் சிறியதாயும், பகீரன் - சர்மிளா (லண்டன்), டினேஸ் -மாதுரி (லண்டன்), தனுசாந்.பிரவீன் (ஜேர்மன்), புவிராஜ் - அஸ்வினி (இத்தாலி), அமல்ராஜ், சங்கீதா, ஜீவிதா, வினிதா, லக்சிதா ஆகியோரின் மாமியாரும், நோவிஸ்னா, அபிஷா, ஆயிஷா, சஞ்சனா, சஞ்சய், அக்சிதா, சாய்ஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(cs.47172) (2.6)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## அமரர் கார்த்திகேசு புஸ்பவதி

புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 3ஆம் வட்டாரத்தை வசிப்பிட மாகவும் கொண்ட **கார்த்திகேசு புஸ்பவதி** நேற்று (16.10.2022) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (கணக்கர்) - அன்னப்பிள்ளை அவர்களின் மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா அவர்களின் மருமகளும் காலஞ்சென்ற கார்த்திகேசு அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகபூசனி சரஸ்வதி, நடராசா ஆகியோ ரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்றவர்களான கண்மணி, சின்னம்மா, பொன்னம்மா, கண்ணம்மா, கந்தையா, தம்பையா, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் வசந்தா, வரதா, வாணி ஆகியோரின் அன்புத் தாயா ரும் ஸ்ரீஸ்காந்தன் (சிறிகடை) அவர்களின் மாமியாரும், ஷாளினி (தொண்டர் திருநாவுக்கரசு முன்பள்ளி ஆசிரியை), ஷாரங்கன் (Esoft metro campas, உதவி முகாமையாளர்) உருத்திர கண்ணா (மனோன்மணி ரவல்ஸ் 776) ஆகியோரின் பேர்த்தியும் ஷஸ்வினி, ஸ்ரீவர்னி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2022) திங்கட்கிழமை பி.ப.4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மணற்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

தகவல்,
குடும்பத்தினர் (சிறிகடை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி




## அன்னலிங்கம் கிரிஷாத் (மிறாஜ்)

தோற்றம்
21.05.1987

மறைவு
14.10.2022

மீட்டி இசை கொடுக்கும் யாழ் இன்று
மௌனித்துப் போனதேனோ?
கட்டிளங்காளையே! கிரிஷாத் நீ
கட்டாந்தரையிலா? ஏன்?
துடிப்பாய்ப் படித்துத் துலக்கிய நீ
இடி போல எம்மை ஏங்கவைத்து
ஓடி மறைந்தது எங்கே?
வாழ்க்கைச் சோலையிலே
வண்ணமாய் நீ பூத்துக் குலுங்கிப்
பொலிவுடனே வாழுங் காலத்தில்
பொல்லாத காலன் சொல்லாமல்
கொண்டு சென்றானோ கொடியவன்
பட்டு மெத்தை தந்து படுக்கவைத்துத்
தூங்கவைத்த தாத்தா பாட்டியையும் உன்னைத்
தாங்கிய வயிறும் தூக்கிய தோளும்
ஏங்கியே கதறியபடி விம்மி நிற்க
ஊருக்காய் உறவுக்காய் அயராது உழைத்துதவும்
உன் மாமன்மார் மாமிமார் உற்றார் உறவினர்
சுற்றம் நண்பர்கள் விம்மியழ எங்கே நீ?
தேடுகிறோம் உன்னை!


பிரிவால் துயருறும்:

ஸ்ரீரங்கநாதன் துஸ்யந்தி குடும்பம் (ஜேர்மனி)
கிருபாகரன் மதுராம்பிகை குடும்பம் (கனடா)
குணபாலன் சுசிலாம்பிகை குடும்பம் (கனடா)

(CS 21262)1-6

# கண்ணீர் அஞ்சலி

## அன்னலிங்கம் கிரிஷாத் (மிறாஜ்)



தோற்றம்
21.05.1987

மறைவு
14.10.2022

கண்ணீருக்குள் நின் குடும்பம் ஆழ்ந்திருக்க
எண்ணமதில் உந்தன் இழப்பால் கதறியழ
கண்களும் இமைக்க மறந்ததையா - உந்தன்
பதுமையான பேச்சும் பதுமை நடையும்
நொடியினில் காணாது தவிக்கின்றோம்
தொலைபேசியில் உந்தன் செய்திவந்த கணம் முதல்!
உந்தன் வாய்மொழி நின்றாலும்
மூடியவிழி மலர்ந்திட நின்றாலும் மிறாஜ்ஜே
எங்கள் மூச்சினில் கலந்திருப்பாய்
என்றும் எங்கள் பேச்சினில் நிறைந்திருப்பாய்
வாழ்நாள்தனில் எம்மோடு வாழ்ந்திடுவாய்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

பிரிவால் துயருறும்:

றோயல் அலுமினியம் நிறுவனம்
உரிமையாளர் காந்தன் (டோகா),
[illegible] அபிநாஸ், அஸ்வின், பெரியம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கிலமொழி...

வாய்ப்புக்களை சூரிய கற்கை நிறுவனம் ஏற்படுத்தித் தரவேண்டும் - இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் கோரிக்கை முன்வைத்தார்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் சூரிய கற்கை நிறுவகத்தில் சிங்கள கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சுதுமலையிலுள்ள திருமண மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இங்கு இரண்டு மொழிகள்தான் உண்டு. தமிழ் மற்றையது சிங்களம். ஆங்கிலமொழி மூலமான கல்வி முன்னர் இருந்தது. இடையில் அதனை நிறுத்தினார்கள். தனிச் சிங்களச் சட்டத்தை இந்த நாட்டில் அறிமுகப்படுத்தினார்கள். அன்றிலிருந்து இந்த நாட்டில் இருந்த கொஞ்சநஞ்ச புரிந்துணர்வும் காணாமற்போனது.

மொழியைத் திணிப்பதன் ஊடாக அதை வளர்க்க முடியாது. சிங்கள மொழியை தமிழர்கள் மீது பலவந்தமாக திணித்தமையாலும், அதனோடு இணைந்த ஏனைய புறக்கணிப்புக்கள் இரண்டாம்தர நடத்தைகளாலும் ஏற்பட்ட விளைவுகளை கண்ணூடாகப் பார்த்தோம்.

மொழி ஓர் ஊடகம். இன்று இந்த நாட்டில் அரசாங்க பணியை நாடும்போதும் சரி, இந்த நாட்டில் பணியாற்றுவதற்கும் சிங்கள மொழி தேவையாகவுள்ளது. விரும்பியோ விரும்பாமலோ அதைக் கற்கவேண்டும்.

சூரிய கற்கை நிறுவனம் சிங்கள மக்களுக்கு தமிழ் மொழியையும், தமிழ் மக்களுக்கு சிங்கள மொழியையும் கற்பிக்கின்றது. அவர்கள் மிகச் சிறப்பாக இதனைச் செய்கின்றார்கள்.

இரண்டாவது மொழியாக சிங்களத்தை இங்குள்ளவர்கள் கற்றிருக்கின்றார்கள். மூன்றாவது மொழியும் அவசியம். ஆங்கிலத்தை நாம் கற்க வேண்டும். வெளிநாடுகளில் மேலதிக கல்வியை முன்னெடுக்க அது தேவையானது. அதனை எங்கள் இளையோர் கற்பதற்கும் சூரிய கற்கை நிறுவனத்தினர் உதவவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன்-என்றார். (அ-ஒ-125)

## வெட்டுக்காயங்களுடன்...

ஒருவர் இருப்பதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த நபர் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ஒ-26)

## தேசிய...

பயணத்திலும் நாங்கள் அனைவரும் சேர்ந்து பயணிக்க வேண்டும் - இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று வலியுறுத்தினார்.

சூரிய கற்கை நிறுவகத்தில் இரண்டாம் மொழி சிங்கள கற்கை நெறியை வடபகுதியில் கல்வி கற்று பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சுதுமலைப் பகுதியில் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் எந்த இனத்தவராகவும் எந்த மதத்தவராகவும் இருக்கலாம். எமக்குப் பிறப்பிலேயே கிடைத்ததுதான் மதமும் இனமுமே தவிர நாங்கள் கேட்டு வந்த வரம் அல்ல. அந்தக் கருத்து, அந்த எண்ணம் எங்களுக்கு இருக்குமாயின் நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ முடியும்.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் பிறந்தவன் என்ற வகையிலும், இலங்கை சுதந்திரம் அடைந்த அன்று தேசியக் கொடியை கையால் ஏந்திச் சென்றவன் என்ற வகையிலும் எனக்கு அந்த உரிமையும் அந்தக் கடப்பாடும் இருக்கின்றது.

சிங்களத் தலைவர்கள், தமிழ்த் தலைவர்கள், முஸ்லிம் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்துதான் வெள்ளையர்களிடமிருந்து எமது நாட்டை மீட்டெடுத்தோம். அதேபோல் தேசிய ஒற்றுமைக்கான பயணத்திலும் நாங்கள் அனைவரும் சேர்ந்து பயணிக்க வேண்டும். அப்போதுதான் எங்களால் ஒன்றாக வாழ முடியும். அதேவேளை, எங்களுடைய நாட்டையும் நாங்கள் கட்டியெழுப்ப முடியும்.

இன்று எமது நாடு இந்த நிலைக்குச் சென்று இருப்பதற்கான பிரதான காரணம் ஒற்றுமையின்மையும் ஐக்கியமின்மையும் ஆகும். ஒருவரை ஒருவர் வன்மம் கொண்டு ஒருவருடன் ஒருவர் போராடி உயிர்கள் இழந்து, சொத்துக்கள் இழந்து இறுதியில் எங்களுக்குக் கிடைத்தது என்ன?

1948ஆம்ஆண்டு நாங்கள் சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டபோது தெற்காசியாவிலேயே இரண்டாவது செல்வந்த நாடாகக் காணப்பட்டோம். அதனால்தான் கூறுகின்றோம் இந்த ஐக்கியமின்மையும், இந்த நல்லிணக்கமின்மையும் இந்தத் துரதிர்ஷ்டவசமான செயற்பாடுகளுக்கு காரணமாகும்.

நாங்கள் ஐக்கியத்துடனும் நல்லிணக்கத்துடனும் செயற்பட வேண்டும். நான் தென்னிலங்கை நோக்கி பெரிய எதிர்பார்ப்புடன் செல்கின்றேன். நான் யாழ்ப்பாணத்தில் தங்கி நின்ற இரு நாள்களும் கூறியது என்னவெனில் சுபீட்சமான எதிர்காலம் உருவாக வேண்டும் என்பதேயாகும்-என்றார். (அ-ஒ-22-12)

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 03 . 1943 — மறைவு 16 . 10 . 2022

### திரு.சுப்பிரமணியம் பொன்னம்பலம்

(முன்னைநாள் புகையிரத திணைக்கள உத்தியோகத்தர் - அநுராதபுரம்)


மாரிதோட்டம் தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் குமரகோட்டம் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுப்பிரமணியம் பொன்னம்பலம் நேற்று (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 12 . 1960 — மறைவு 14 . 10 . 2022

### திரு.வேலாயுதபிள்ளை கருணாநிதி (ஆனந்தி)

புளியங்கூடலை பிறப்பிடமாகவும் கொக்குவில் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு.வே.கருணாநிதி (ஆனந்தி) கடந்த (14.10.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், பசுபதிப்பிள்ளை - தில்லையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கலைமகள் அவர்களின் அன்புக் கணவரும், சண்முகலிங்கம், அமரர் பரமேஸ்வரன், அமரர் இலச்சுமணன், அமரர் இராமநாதன், தவமலர், திருமால்மருமகன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சீராளன், நிவேதிகா, நிரோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவி, காலஞ்சென்ற தர்மாம்பாள், நாகேஸ்வரி, ஞானேஸ்வரி, இராஜதுரை, தனலட்சுமி, இராஜேஸ்வரி, நடராஜா (காந்தி), இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, சிவலோகநாதன், விமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிருஜன், திலக்ஷி ஆகியோரின் அன்பு மாமனாரும், சரண், யுவேன், சாத்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2022) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் புளியங்கூடலில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று, புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

077 0610 876
077 2503 822

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



பிறப்பு 22 . 07 . 1937 — இறப்பு 15 . 10 . 2022

### திரு.அந்தோனிப்பிள்ளை பெனடிக்ற் ஞானப்பிரகாசம்

கொழும்பை பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.பெனடிக்ற் ஞானப்பிரகாசம் அவர்கள் நேற்று முன்தினம் (15.10.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை மேரி மக்டலினா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற ராஜேந்திரம் மற்றும் அன்ரனி சூசைப்பிள்ளை, மைக்கல் பீற்றர் பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற மரீனா பற்றிமா அவர்களின் அன்புக் கணவரும், அனிற்றா துஸ்யந்தி, மேரி டில்றுக்சி, மக்டலின் தர்சினி மற்றும் காலஞ்சென்ற அன்ரனி ஜெறாட் ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மராஜா, ஜெயக்குமார், மில்டன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், றொசிற்றா, பிரசான், கொண்சிற்றா, சஜீவ், கிரிசாந், சதுஜன், சறோமியா, சறோனிகா மற்றும் ஆரோன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (18.10.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அச்சுவேலி சூசையப்பர் ஆலயத்திற்கு திருப்பலிக்காக எடுத்து செல்லப்பட்டு நல்லடக்கத்திற்காக அச்சுவேலி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெ.டில்றுக்சி (மகள்)
077 616 3304

(CS 2...) (CR 38303) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 மாதக் குழந்தை சளியால் சாவு!

கிளிநொச்சி, ஒக். 17

8 மாதக் குழந்தையொன்று தொடர் காய்ச்சல் மற்றும் சளியால் உயிரிழந்துள்ளது. கிளிநொச்சி - கணேசபுரத்தைச் சேர்ந்த துவாரகன் கவின் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு ஒரு வாரமாக காய்ச்சல் மற்றும் சளி இருந்ததையடுத்து கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது. பின்னர் மேலதிக சிகிச்சைக் காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 14 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு குழந்தை உயிரிழந்துள்ளது.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

வீனஸ் விசேட வைத்தியசாலையின் அடுத்த சகாப்தத்தை நோக்கிய நகர்வினை முன்னிட்டு 19.10.2022 அன்று மக்களுக்கான மற்றும் நோயாளர்களுக்கான சிறப்பு சலுகைகள்



வீனஸ் வைத்தியசாலையானது 19.10.2022 அன்று (புதன்கிழமை) புதிய ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. அன்றைய நிகழ்வில் காலை கொடியேற்ற வைபத்தினை தொடர்ந்து

"உயிர் காக்கும் உன்னத சேவை"

என்னும் தொனிப் பொருளில் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு வீனஸ் வைத்தியசாலை பணியாளர்களினால் வீனஸ் வைத்தியசாலையில் 'இரத்த தான முகாம்' முன்னெடுக்கப்படுகின்றது.

அதனைத் தொடர்ந்து தற்கால நிலைமையை கருத்தில் கொண்டு மக்களின் நலன் கருதி வைத்தியசாலையினால் பின்வரும் விசேட சலுகைகள் வழங்கப்படுகின்றன.

- 19.10.2022 - 21.10.2022 வரை அனைத்து வைத்திய நிபுணத்துவ சேவைகளுக்கும் வைத்தியசாலைக் கட்டணம் முற்றிலும் இலவசம்.
- 19.10.2022 - 21.10.2022 வரை ஸ்கானிங் சேவைகளுக்காக வருவோருக்கு வைத்தியசாலைக் கட்டணத்தில் 50% தள்ளுபடி.
- 19.10.2022 - 21.10.2022 டிஜிற்றல் X - Ray கதிர்ப்பட சேவைகளுக்கு முழுக்கட்டணத்தில் 25 % தள்ளுபடி.
- 19.10.2022 - 21.10.2022 வரை ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்கு முழுக்கட்டணத்தில் 50% தள்ளுபடி.
- 19.10.2022 - 21.10.2022 வரை பற்சிகிச்சைகளுக்கும் வரும் வாடிக்கையாளர்களுக்கு வைத்தி யசாலைக் கட்டணம் முற்றிலும் இலவசம்.

**வீனஸ் விசேட வைத்தியசாலை**
**இல. 136, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**தொ.இல : 021 222 4172/ 021 222 8470 / 021 222 8475**
**070 613 6136**

(CR 38299) (3/6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

12.10.2022 புதன்கிழமை அன்று அனுராதபுரம் ராஜரட்டை பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 22 ஆவது பட்டமளிப்பு விழாவில் கணினித்துறையில்


Congratulations

BICT (Hons)

பட்டத்தைப் பெற்ற

எமது அன்பு மகன்

**தர்மலிங்கம் கௌதமன்**



வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் நல் ஆசீர்வாதங்களும் பெற்று வளமான வாழ்வு வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

அதேவேளை அவரை முன்பள்ளியில் இருந்து இதுவரை காலமும் அக்கறையுடன் ஊக்கப்படுத்தி, வழி நடத்திய அனைத்து **ஆசிரியப் பெருந்தகைகளையும், உறவினர்களையும்** இவ்வேளையில் மனம் நிறைந்த நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

**வாழ்த்துபவர்கள்:**
**அப்பா, அம்மா, அண்ணா, தங்கை.**

**ராஜா ஸ்ரோர்ஸ், மட்டுவில் அம்மன் கோவிலடி.**

## கைதடியிலுள்ள...

தின் சுதேச மருத்துவக் கற்கைகள் நிலையத்துடன் இணைப்பதற்கான முயற்சிகளைச் சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது. இதற்கான முன்மொழிவு அடங்கிய அமைச்சரவைப் பத்திரமொன்று இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த அமைச்சரவை முன்மொழிவின் படி, கல்வி அமைச்சின் கீழ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் நெறிப்படுத்தலில் பட்டங்களையும், டிப்ளோமாக்களையும் வழங்கும் கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகு, கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலைவளாகத்தின்சித்தமருத்துவ அலகு ஆகிய கல்வி நிறுவனங் களை சுகாதார அமைச்சின் நேரடி முகாமையின் கீழ், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவக் கற்கைகள் நிலையத்துடன் இணைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## உயிர்கொல்லி...

பகுதியில் வைத்துக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

34, 26 மற்றும் 42 வயதுடைய சந்தேகநபர்களே நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 2 கிராம் 350 மில்லிகிராம் உயிர்கொல்லி ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான குழுவினர் நேற்று பி.ப. ஒரு மணியளவில் சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.

உயிர்கொல்லி ஐஸ் போதைப் பொருள் வாங்க வருபவர்களிடம் பணம் இல்லாதவிடத்து அவர்களுடைய தொலைபேசிகளை வாங்கிவிட்டு அதற்குப் பதிலாக உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருளை பிரதான சந்தேகநபர் விற்றுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தன்னுடைய மோட்டார்சைக்கிளைக்கொடுத்து அதன் பெறுமதிக்குரிய உயிர்கொல்லி ஐஸ் போதைப் பொருளை பெற்றுச் சென்றுள்ளார். அந்த மாணவன் போதை வழக்கொன்றில் சிக்கியிருப்பதால் பல்கலைக்கழகத்தில் இருந்து தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபர்களிடமிருந்து 7 தொலைபேசிகளும், ஒரு மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உயிர்கொல்லி ஐஸ் போதைப் பொருள் பாவனையும் தற்போது அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-26)

## மின்சாதனங்கள்...

கைதான இளைஞர்கள் இருவரும் 30 வயதுடையவர்கள். ஒருவர் சுன்னாகம் புதுவீடுகுடியிருப்பைச் சேர்ந்தவர். மற்றையவர் கல்வியன்காடு விளையாட்டரங்க வீதியைச் சேர்ந்தவர்.

இந்தப் பகுதியில் கடந்த வாரம் உயிர்கொல்லி ஹெரோய்ன் வியாபாரத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், அந்தப் பகுதியில் தொடர்ந்தும் உயிர்கொல்லி போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்படுவதாக இரகசியத் தகவல் கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்துள்ளது.

இதனையடுத்து ஞானபாஸ்கரோதயா விளையாட்டரங்க வீதிப் பகுதியில் விசேட சோதனையை முன்னெடுத்தபோது, மோட்டார் சைக்கிளில் பெட்டியுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியவர்களை மறித்து பொலிஸார் சோதனை நடத்தியுள்ளனர். இதன்போது 15 சுடு தண்ணீர்ப் போத்தல்கள், மின்குமிழ்கள், ரோச் லைட்கள் என்று மின்னியல் சாதனங்களுடன் 100 உயிர்கொல்லி போதை மாத்திரைகளும் அவர்களிடம் இருந்துள்ளன. அதனையும் உடைமையிலிருந்த 18 ஆயிரம் ரூபா பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மின்சாதனங்கள் விற்பது போன்று நடமாடினால் யாருக்கும் சந்தேகம் வராது என்பதால், அதனை விற்பனை செய்வது போலசெல்வதாகவும்; விசாரணைகளின் போது சந்தேகநபர்கள் தெரிவித்துள்ளனர். இனந்தெரியாதவர்களே தமக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து உயிர்கொல்லி போதை மாத்திரைகளை விநியோகிப்பதாக விசாரணைகளின்போது குறிப்பிட்டுள்ளனர். உயிர்கொல்லி போதை மாத்திரையை 750 ரூபாவுக்கு விற்பனை செய்வதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-125)

## ராஜபக்சக்களின்...

யொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதற்கு சமாந்தரமாக மொட்டுக் கட்சி செயற்பாட்டாளர்கள் பயணித்த வழிகளில் ஆங்காங்கே புல்லும், 'புண்ணாக்கும்' வைக்கப்பட்டிருந்தது. கறுப்பு கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன.

'ஒன்றாக எழுவோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் தொகுதி வாரியாக மக்கள் கூட்டங்களை நடத்தி, மக்கள் மத்தியில் மீள காலூன்றுவதற்கான நடவடிக்கையில் மொட்டுக் கட்சி இறங்கியுள்ளது.

முதலாவது கூட்டம் களுத்துறையில் நடைபெற்ற நிலையில், 2ஆவது கூட்டம் நேற்று நாவலப்பிட்டியவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மஹிந்த ராஜபக்ச உட்பட மொட்டுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும் நாவலப்பிட்டிய நகரில் பேரணியொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டிய தொகுதி அமைப்பாளர் சசங்க சம்பத் சஞ்சீவ தலைமையில் நடைபெற்ற இப்பேரணியில்மக்களும்பங்கேற்றிருந்தனர். எனினும், பேரணியை தொடர்வதற்கு பொலிஸார் அனுமதி வழங்கவில்லை. இரு தரப்புகளின் அரசியல் நடவடிக்கை இடம்பெறுவதால் சட்டம், ஒழுங்கு பாதிக்கும் என கருதி தடை விதிக்கப்படுகின்றது எனபாதுகாப்புதரப்பால்அறிவிக்கப்பட்டது. நகரத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். பொலிஸ் தடையைமீறி போராட்டக்காரர்கள் முன்னோக்கிச் செல்ல முற்பட்டனர். இதனால் இரு தரப்புக்கும் இடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது. இறுதியில் நாவலப்பிட்டிய தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் உட்பட 15 பேர் கைது செய்யப்பட்டனர். பொலிஸார் பக்கச்சார்பாகச் செயற்பட்டனர் எனவும், நீதிமன்ற அனுமதியின்றி கைது இடம்பெற்றுள்ளது எனவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (அ-ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஐபோன் 14' விரைவில் இந்தியாவில் தயாரிப்பு

புதுடில்லி, ஒக். 17
அப்பிள் நிறுவனம் தனது ஐபோன்14 அலைபேசியை இந்தியாவில் தயாரிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இதன் மூலம் அந்நிறுவனம் சீனாவிலிருந்துதான் அதன் விநியோகச் சங்கிலியை மாற்றவுள்ளது.
அப்பிள் நிறுவனமானது, தனது பெரும்பாலான தொலைபேசிகளை சீனாவில் தயாரிக்கிறது. ஆனால், வொஷிங்டனுக்கும் பெய்ஜிங்குக்கும் இடையே பதற்றங்கள் அதிகரித்து வருவதால் சில உற்பத்திகளை சீனாவுக்கு வெளியே மாற்றுவதற்கு அப்பிள் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.
அப்பிள் நிறுவமானது, தனது புதிய 'ஐபோன் 14' ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.
'இந்த மேம்படுத்தப்பட்ட ஐபோன் 14 வகையை இந்தியாவில் தயாரிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்' என அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
அப்பிளின் பெரும்பாலான ஐபோன்களை உற்பத்தி செய்யும் தாய்வானைத் தளமாகக் கொண்ட 'பாக்ஸ்கான்' நிறுவனம் 2017 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் இயங்கி வருகிறது. இந்நிலையிலேயே தனது உற்பத்தியை இந்தியாவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.
இந்தியாவில் ஐபோன் உற்பத்தி அதிகரித்துள்ளது என்ற அறிவிப்பு பிரதமர் நரேந்திர மோடியின் நிர்வாகத்துக்குக் கிடைத்த வெற்றியாகும்.
அத்துடன், நாட்டின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட அவரது அரசாங்கம் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு 'மேக் இன் இந்தியா' பரப்புரையைத் தொடங்கியது.
அதேநேரம், இந்த மாத தொடக்கத்தில், முதலீட்டு வங்கியான ஜேபி மோர்கனின் ஆய்வாளர்கள், அப்பிள் நிறுவனம் தனது இந்த ஆண்டு உற்பத்தியில் 5 சதவீதத்தை இந்தியாவுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கிறோம் எனத் தெரிவித்தனர்.
2025 ஆம் ஆண்டுக்குள் அனைத்து ஐபோன் உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு தெற்காசிய நாட்டை மையப்படுத்தியதாக இருக்கும் என்றும் கணிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-இ)

## வல்லைச்...

சம்பவமாக இது பதிவாகியுள்ளது.
நவாலியிலிருந்து புலோலி நோக்கி உறவினருடன் சென்று கொண்டிருந்த வயதான பெண்ணை தள்ளி விழுத்தி, அவரது கழுத்திலிருந்த 9 பவுண் தாலிக் கொடியை வழிப்பறிக் கொள்ளையர்கள் பறித்துச் சென்றுள்ளனர்.
நேற்று பி.ப. ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்த வழிப்பறிக்கொள்ளையை கறுப்பு நிற பல்ஸர் ரக மோட்டார் சைக்கிளில் முகத்தை முழுவதுமாக மூடிய ஹெல்மட் அணிந்து வந்த இருவரே மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
(அ-ஒ-26-23)

## தவறுகளைத்...

பொதுஜன பெரமுன கட்சியின் நாவலப்பிட்டிய தொகுதிக் கூட்டம் நேற்று நடைபெற்றது.
இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மஹிந்த இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நமது அரசாங்கத்தின் காலத்திலேயே கொரோனா பிரச்சினை ஏற்பட்டது. அந்தச் சவாலை எதிர்கொண்டு முன்னோக்கிச் செல்ல முற்படுகையில் பொருளாதாரப் பிரச்சினை ஏற்பட்டது. இது எமக்கு புதிது அல்ல, மன்னர் காலத்தில் இருந்து சவால்கள் இருந்துள்ளன. ஆனால், ஒன்றாக எழுந்து அவற்றை வெற்றிகொண்ட வரலாறு உள்ளது. இந்த உண்மை தெரிந்தும் சிலர் அதனை வெளிப்படுத்துவதில்லை. ஒன்றிணைந்து பொதுவேலைத் திட்டத்தின்கீழ் பயணித்தால் மீண்டெழ முடியும். எனினும், பொது வேலைத்திட்டத்துக்கு அழைப்பு விடுத்தாலும் சிலர் வருவதில்லை.
சவால்களை வெற்றிகொள்ள முடியாமல், பிரச்சினைகளை பிறர்மீது சுமத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அந்தவகையில் எம்மீது பழிசுமத்தப்பட்டு நாம் பந்தாடப்பட்டுவருகின்றோம். திட்டமிட்ட அடிப்படையில் சேறுபூசும் அரசியல் முன்னெடுக்கப்படுகின்றது. சேற்றை அள்ளும்போது தமது கைகளில்தான் அது முதலில் படும் என்பதை சேறுபூசுபவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.
இலங்கையில் அமைதி நிலவுவதை சிலர் விரும்புவதில்லை. சுயமாக எழுவதை மேலும் சிலர் விரும்புவதில்லை. இந்நிலைமை மாற்றப்பட வேண்டும்.
தவறு இடம்பெற்றுள்ளது என்பதை ஏற்கின்றோம். இதனை சுட்டிக்காட்டி துள்ளிக்குதிப்பவர்கள் சுற்றவாளிகளும் அல்லர். தவறு இடம்பெற்றால் அதனை திருத்திக் கொள்ளவும் வாய்ப்பு வேண்டும். முயற்சி செய்யாமல் முடங்கி இருப்பதுதான் தவறு - என்றார்.
(அ-ஒ-44)

25ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மறைவு -17.10. 1997
அமரர் கனகசபை நடேசன்
(பங்காளர், சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்)
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும் - எம் முன்னே
உங்கள் முகம் எந்நாளும்
உயிர் வாழும் அப்பா !!!
குடும்பத்தினர்.
23, கோபால் ஒழுங்கை, வண்ணார்பண்ணை.

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை
தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்
077 8147 389
077 9865 457

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 . 08 . 1958



மறைவு 28 . 09 . 2021

அமரர்
விஜயரத்தினம் சுலோசனாதேவி
திதி: 17.10.2022
அன்பின் இலக்கணமாய்
எமது குடும்பத்தின் ஆணிவேராய் இருந்து
கண்ணை இமை காப்பதுபோல் காத்து
எம்மை வழிநடத்திய நம் குலவிளக்கு
அணைந்து ஆண்டு ஒன்று ஆனாலும்
உங்கள் நினைவுகள்
எங்கள் மனதை விட்டு நீங்காது.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
என்றும் உம்பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
(CR 38304) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியான செய்தி

## கொழும்பு விலையில் யாழ். நகரில்

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**சில வருடகாலமாக இயங்கிவரும் ஸ்தாபனத்தில் இன்று முதல் விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.**

- பான்ஸிப் பொருட்கள்
- பை (Bag) வகைகள்
- மாபிள் வகைகள்
- பாதணி வகைகள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- விளையாட்டுப் பொருட்கள்
- குடை, மழைக்கவசங்கள்
- தையல் உபகரணங்கள்
- பாடசாலை பொருட்கள்
- கவரிங் பொருட்கள்
- அழகுசாதனப் பொருட்கள்
- சில்வர் பொருட்கள்
- கிளாஸ் வகைகள்
- பிளாஸ்ரிக் பொருட்கள்
- முகக் கவசங்கள் (Mask)
- மணிக்கூடுகள்

மொத்தக் கொள்வனவிற்கு 10% கழிவு

**சரவணபவன் பான்ஸி ஹவுஸ்**
**26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன்**
**(செம்மா தெரு ஒழுங்கை) யாழ்ப்பாணம்.**

உரிமையாளர்:- தே.கலைத்தாசன் (கரன்)
021 315 5900, 077 468 3354



### விதைநெல், தரமான தென்னம்பிள்ளை விற்பனைக்கு

- அத்தாட்சிப்படுத்தப்பட்ட 3 1/2 மாத AT 362 (கோறா /ஈக்கு) சிவப்பு விதை நெல் சில்லறை விலை. 1 புசல் ரூ.4,200/=, மொத்த வி.வி.ரூ-4,150/=
- சம்பா - 3 1/2 மாதம் ரூ.3,700/=
- தென்னம்பிள்ளை 5 வருடம், 3 வருடம் - பைக்கட்-ரூ.240/=, பாத்திப்பிள்ளை-ரூ.190/=

அபி பாம் தொடர்பு: 070 521 2458





### இலவச அமெரிக்க லொத்தர் விசா

2024 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
நிரந்தர குடியேற்றத்திற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்.
(18 வயதிற்கு மேற்பட்டோர் தனியாக விண்ணப்பிக்கலாம்.)
2002 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுவரும் இச் சேவையினூடாக 1000க்கும் அதிகமானோர் அமெரிக்கா சென்றுள்ளனர். இச்சந்தர்ப்பத்தை நழுவ விடாது உங்கள் அதிஷ்டத்தை தட்டிச் செல்லுங்கள்.
தொடர்புகளுக்கு : 0777554528
திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிடெட்
321, K.K.S.Road, Jaffna.



### காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தாவடி சந்திக்கு அருகாமையில்**
**09 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- மூன்று பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- K.K.S வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- பார்வையிடும் நேரம்
  காலை 09.00- மாலை 06.00 மணி வரை

தொடர்பு- 0776234204



### காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு**

- ✓ ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்(காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- ✓ யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
- ✓ 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 1/2 KM தூரம்
  பார்வையிடும் நேரம்:
- ✓ காலை 06.00 - மாலை 6.00

தொடர்பு: 077 911 6983
076 755 8606


## ஆலயத்துக்குச் சென்ற பெண்ணின் கைப்பை களவு


யாழ்ப்பாணம், ஒக். 17

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலயமொன்றுக்குத் தரிசிக்கச் சென்ற பெண்ணின் கைப்பை களவாடப்பட்டுள்ளது என மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை சண்டிலிப்பாய், சீரணி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது. குறித்த பெண் மோட்டார் சைக்கிளில் கைப்பையை வைத்துவிட்டு ஆலயத்தை தரிசித்துவிட்டு வந்து பார்த்தவேளை கைப்பை திருடப்பட்டமை தெரியவந்தது. அதனையடுத்து குறித்த பெண் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கைப்பையில் அலைபேசி உட்பட பெறுமதியான பொருள்கள் இருந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-27)


### 08ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் குழந்தைவேலு
**துரைராஜசிங்கம்**

தோற்றம் 26.06.1951
மறைவு 15.10.2014

நீங்கள் நிஜமாக மறைந்து
8ஆண்டுகள் ஆனதோ நீங்கள் இல்லாமனை
பொலிவிழந்து போனதுவோ
காலங்கள் ஓடிக்கடந்தாலும் உங்களை
எம்மனதில் வைத்து பூஜிப்போம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(CS 21231) (3/6)





அமெரிக்க லொத்தர் இலவச விசா

ஏமாற்றங்களை தவிர்க்க
உடனே பதியுங்கள்

Passport அவசியமில்லை

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம் A/L

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்

V2 Travels

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்

0768226244



### கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 18.01.1948
மறைவு 12.10.2022

எமது நிறுவனத்தின் பொது முகாமையாளராக (G.M) கடமையாற்றும் மகேந்திரராசா மன்மதராஜா அவர்களின் அன்புத் தாயார்

அமரர்
**தவமேரி மகேந்திரராசா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்....!!!

பிரிவால் துயருறும்
செல்வா குழுமம்
நிர்வாகம் மற்றும் ஊழியர்கள்

(CS 21234) (3/6)



## அலுவலக / வீடு வாடகைக்கு
## (Office for Rent)

யாழ். நகருக்கு அருகாமையில் பலாலி வீதி பிரதான பஸ் சாலையில், கோண்டாவில் சந்தியில் புதிதாக Renovation செய்யப்பட்ட மாடி வீடு, கம்பனி, அலுவலக தேவைக்கு நீண்டகால அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்

CCTV கமராக்கள் பொருத்தப்பட்டு பாதுகாப்பான சூழலில்
யாழ்.பல்கலைக்கழக Hostelக்கு மிக அருகில்

5 Roomகள், 4 Hallகள், 2 நவீன குளியல் அறைகள், 2 நவீன Toilet கள், சமையல் அறை, சாப்பாட்டு அறை, வாடிக்கையாளர் மற்றும் ஊழியர் வாகன தரிப்பிடங்கள், பாதுகாப்பு ஊழியர் அலுவலகம் (Guard Room), வெளியில் குளியல் அறை, Toilet வசதிகளுடன் உள்ளது. Audit Firm IT Firm, NGO, BPO,Law Firmகள் நடத்த ஏற்றது.

Contact: 076 114 1207
(Tamil, Sinhala, English)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.